# பனித்துளி செய்திகள்!



"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

30.10.2023

## 27. யார் பரிசுத்தாவியானவர் தங்கும் ஆலயம்?

**நா**ம் துன்மார்க்கருடைய ஆலோசனைகளில் நடப்பதில்லை..... இருளோடு ஒளிக்கு ஐக்கியம் வைப்பதுமில்லை, ஏன்? இருளை கடிந்து கொள்வதற்கும் நாம் தயங்குவதில்லை..... பேலியாளாகிய பாபிலோனோடு கிறிஸ்துவாகிய எருசலேம் இசைவாய் இருப்பதுமில்லை (2கொரி.6:14,15)... ஆகிலும், பாவிகளையும், துரோகிகளையும், நன்றியில்லாதவர்களையும் அன்புகூர்ந்த இயேசுவின் அன்பை, நம் இருதயத்தில் நாம் பெற்றிருக்க முடியுமே! (லூக்கா 6:35).

'இந்த விசுவாசம்' கொண்டவர்களுக்கே பரிசுத்தாவியானவர் வல்லமை தந்தருளி, தேவ அன்பை அவர்களின் இருதயத்தில் ஊற்றி விடுவார்!! (ரோமர் 5:5). முதலாவது அன்புள்ளவனாய் இருந்து, போகப்போக அன்பற்றவர்களாய் மாறுவது "எந்த மனுஷனுக்கும்" உரிய பண்பு என 10ம் வசனம் இடித்துரைக்கிறது! "இன்றுவரைக்கும்" அன்புமாறாமல் கொண்ட ஜீவியமே மகிமை நிறைந்த இயேசுவின் ஜீவியம்!

இந்த அன்பே ஒருக்காலும் ஒழிவதில்லை (1கொரி.13:8). நீங்கள் வேண்டுமானால், என்னை உடைத்து இடித்துப்போடுங்கள்..... ஆகிலும் மூன்றாம் நாளில் மீண்டும் எழுந்து வந்து உங்களை அன்புகூருவேன் என சவாலிட்டார்! ஓர் கட்டிடம் அல்ல, இதுபோன்ற அன்புகொண்ட சரீரம் கொண்டவனே அவரது ஆலயம்!! (யோவான் 2:19,20).

– ரத்னம்